

# 11 கிராம உத்தியோகத்தரும் கிராம வாசியும்

**உரையாடலை செவிமடுப்போம், சோடிகளாக இணைந்து உரையாடுவோம்.**




**கிராமவாசி கதிர்வேல்** : வணக்கம் ஐயா!

**கிராம உத்தியோகத்தர்:** வணக்கம். இருங்க. என்ன விசயம்?

**கதிர்வேல்** : நற்சான்றிதழ் பத்திரம் தேவை ஐயா

**கிராம உத்தியோகத்தர்** : யாருக்கு?

**கதிர்வேல்** : மகனுக்கு

**கிராம உத்தியோகத்தர்** : எதுக்கு?

**கதிர்வேல்** : ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பிக்க.

**கிராம உத்தியோகத்தர்** : உங்கள் மகன் இவரா?

**கதிர்வேல்** : ஓம் ஐயா!

| | | |
|---|---|---|
| **கிராம உத்தியோகத்தர்** | : | உங்கள் குடும்பத்தைப் பற்றி எனக்கு நல்லாய்த் தெரியும். கொஞ்சம் இருங்க. |
| **கதிர்வேல்** | : | சரி சரி. |
| **கிராம உத்தியோகத்தர்** | : | தம்பி, பெயர் என்ன? |
| **கலாதரன்** | : | கதிர்வேல் கலாதரன். |
| **கிராம உத்தியோகத்தர்** | : | எத்தனை வயசு? |
| **கலாதரன்** | : | இருபத்தாறு. |
| **கிராம உத்தியோகத்தர்** | : | முகவரி என்ன? |
| **கலாதரன்** | : | இலக்கம் 15, கோயில் வீதி, திருகோணமலை. |
| **கிராம உத்தியோகத்தர்** | : | அடையாள அட்டை இலக்கம் என்ன? |
| **கலாதரன்** | : | 891478405 V |
| **கிராம உத்தியோகத்தர்** | : | இதில கையொப்பம் வையுங்க. சரி, இந்தாங்க சான்றிதழ். |
| **கதிர்வேல்** | : | நன்றி ஐயா. |
| **கலாதரன்** | : | நன்றி சேர். |

## செயற்பாடு - 01

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

1. கிராம உத்தியோகத்தரைச் சந்திக்க வந்தவர்கள் யாவர்?
2. எதற்காகக் கிராம உத்தியோகத்தரைச் சந்திக்க வந்தார்கள்?
3. கதிர்வேல் கலாதரனின் வயது எத்தனை?
4. கலாதரனின் முகவரி என்ன?

| பேச்சு வழக்கு | எழுத்து வழக்கு |
|---|---|
| இருங்க | இருங்கள் |
| ஓம் | ஆம் |
| இதிலை | இதிலே / இதில் |
| சேர் | ஐயா |
| வையுங்க | வையுங்கள் |
| எதுக்கு | எதற்கு |
| ஒண்டு | ஒன்று |
| நல்லாய் | நன்றாக |
| வயசு | வயது |

## செயற்பாடு - 02

**வதிவிடச் சான்றிதழ் பெறுவதற்கு பின்வரும் இடை வெளிகளை நிரப்பி உரையாடலை முழுமைப் படுத்துங்கள்.**

1. **கலா** : வணக்கம்
2. **கிராம உத்தியோகத்தர்** : ____________________
3. **கலா** : எனக்கு ஒரு ____________________ தேவை.
4. **கிராம உத்தியோகத்தர்** : ____________________?
5. **கலா**: கணக்காளர் ____________________ விண்ணப்பிக்க வேண்டும்.
6. **கிராம உத்தியோகத்தர்** : உங்கள் முழுப்பெயர் ______?
7. **கலா** : ____________________
8. **கிராம உத்தியோகத்தர்** : வயது ____________?
9. **கலா** : ____________________
10. **கிராம உத்தியோகத்தர்**: முகவரி ____________?
11. **கலா** : ____________________
12. **கிராம உத்தியோகத்தர்** : ____________ இலக்கம் என்ன?
13. **கலா** : ____________
14. **கிராம உத்தியோகத்தர்** : சான்றிதழ் ____________
15. **கலா** : ____________

# தபால் நிலையம் எங்கே?





மாமா தபால் நிலையத்துக்குப் போக வேணும், போவது எப்படி?

1. தம்பி! நேரே போங்க வைத்தியசாலை ஒண்டு இருக்கு.
2. வலது பக்கம் திரும்புங்க.
3. கொஞ்சத்தூரம் போனதும், சிறுவர் பூங்காத் தெரியும்.
4. கொஞ்சத் தூரம் போனதும், விகாரை தெரியும்.
5. விகாரைக்குப் பக்கத்திலை பாடசாலை ஒழுங்கை இருக்கு.
6. பாடசாலை ஒழுங்கையிலை கொஞ்சத்தூரம் போங்க.
7. பாடசாலையைக் காணலாம்.
8. பாடசாலைக்குப் பக்கத்திலை நூல் நிலையம் இருக்கு.
9. நூல் நிலையத்துக்குப் பக்கத்திலை தபால் நிலையம் இருக்கு.

| பேச்சு வழக்கு | எழுத்து வழக்கு |
| --- | --- |
| வேணும் | வேண்டும் |
| போங்க | போங்கள் / செல்லுங்கள் |
| திரும்புங்க | திரும்புங்கள் |
| பக்கத்திலை | பக்கத்தில் / அருகில் |
| ஒழுங்கையிலை | ஒழுங்கையில் |
| கொஞ்சத்தூரம் | சிறிது தூரம் |
| இருக்கு | இருக்கிறது / உண்டு |

## செயற்பாடு - 03

**பின்வரும் இடைவெளிகளுக்குப் பொருத்தமான எழுத்து வழக்குச் சொற்களைச் சேர்த்துப் பூர்த்தி செய்யுங்கள்.**

மாமா தபால் நிலையத்திற்குப் போக ____________ போவது எப்படி ?

1. தம்பி நேரே ____________ வைத்தியசாலை ஒன்று இருக்கின்றது.

2. வலது பக்கம் ____________

3. கொஞ்சத்தூரம் போனதும், ____________ தெரியும்.

4. சிறிது தூரம் சென்றதும் ____________ தெரியும்.

5. விகாரைக்குப் ________________ பாடசாலை ஒழுங்கையைக் காணலாம்.

6. பாடசாலை ________________ ________________ ________________

7. பாடசாலை ________________

8. பாடசாலைக்கு ________________ நூல் நிலையம்.

9. நூல் நிலையத்திற்குப் ________________ தபால் நிலையம்.

## செயற்பாடு - 04

**படத்தை அவதானியுங்கள், நூல் நிலையத்திற்குச் செல்லும் வழியைக் கூறுங்கள்.**



## செயற்பாடு - 05

**மேலே தரப்பட்டுள்ள மாதிரிப் படத்தினை அடிப்படையாகக் கொண்டு வழிகாட்டுங்கள்.**

1. நேரே ________________
2. வலது பக்கம் ________________ பாடசாலையைக் காணலாம். பின்னர்
3. ________________ பக்கம் திரும்புங்கள்.
4. சிறுவர் பூங்காவைக் காணலாம்.
5. ________________ திரும்புங்கள்.
6. மீண்டும் ________________ திரும்புங்கள்.
7. வைத்தியசாலை ________________
8. வைத்தியசாலைக்குப் ________________ நூல் நிலையம் உண்டு.

## செயற்பாடு - 06

உங்கள் வீட்டில் இருந்து உங்கள் பாடசாலைக்குச் செல்லும் வழியைக் கூறுங்கள். அதை வரைந்து காட்டுங்கள்.